# குருப் 2 முதன்மைத் தேர்வுக்கான மொழிபெயர்ப்பு ஓர் அறிமுகம்

மொழி பெயர்ப்பு என்றவுடன் மூலத்திலிருந்து வரிக்கு வரி மொழி பெயர்ப்பு செய்தல் என்று ஒரு வகை. மூலத்தின் சுவை குன்றாமல் கருத்தினைச் சரள மொழி பெயர்ப்பாகக் கொடுப்பது மற்றொரு வகை.

ஒரு மொழியிலிருந்து இன்னொரு மொழிக்கு மொழி பெயர்க்கும் பொழுது அம் மொழியின் இலக்கண மரபுக்கு ஏற்ப மொழி பெயர்ப்பு அமைய வேண்டும். "தமிழில் பெரும்பாலும் இப்பொழுது உள்ள சொற்களையும் சொற்றொடர்களையும் பயன்படுத்துவது விருப்பத்தக்கதாகும்.

மொழி பெயர்ப்பில் கூடியவரை தமிழ் மரபுத் தொடர்களையும் பழமொழிகளையும் பயன்படுத்த வேண்டும். "**Strikes the iron while it is hot**" என்பதனை "சூடு இருக்கும் போதே இரும்பை அடித்துவிடு" என மொழி பெயர்ப்பது தவறாகும். இதற்குப் பதிலாக "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" என்னும் பழமொழியைப் பயன் படுத்தலாம். இதுபோன்று பிற மொழிச் சொற்களில் உள்ள பெயர்ச்சொற்களை தமிழ்ப்படுத்தும் பொழுது அவற்றைச் சிதைக்காமல் மொழி பெயர்க்க வேண்டும். ஷேக்ஸ்பியர் என்பதனை செகப்பிரியர் எனத் தமிழ்ப் படுத்துவது கூடாது.

**டி என் பி எஸ் சி தேர்வினைப் பொறுத்தவரை நாம் தழுவல் மொழிபெயர்ப்புதான் செய்யப் போகிறோம்**

## கவனத்தில் கொள்ள வேண்டியவை

### Avoiding Conflicts முரண்பாடு தவிர்த்தல்

மூலப்பொருளின் கருத்துக்கள் மாறாமல் இருக்க வேண்டும்

"**I have a brother**" என்பதனை "யான் ஒரு உடன் பிறந்தானை வைத்திருக்கிறேன்" என மொழி பெயர்ப்பது கூடாது. (அதற்குப் பதிலாக "எனக்கு உடன் பிறந்தான் ஒருவன் உள்ளான்" என மொழி பெயர்க்க வேண்டும்.)

### Simple | எளிமை

எல்லோருக்கும் புரியும் படியும் ,வாசிப்பவருக்கு இனையான நடையில் இருக்க வேண்டும்

### Clarity | தெளிவு

மூலத்தில் பயன்படுத்தியிருக்கும் கடினமான சொல்லை அப்படியே பயன்படுத்த வேண்டியதில்ல. சொற்களையோ மரபுச் சொற்றடர்களையோ மொழிபெயர்ப்பை வாசிப்பவரின் வழக்கு மொழிகளில் தரவேண்டும்

**The face is the index of the mind** (முகம் என்பது மனதின் குறியீடாகும்)

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

## எ.கா மொழிபெயர்ப்பு 10 வகுப்பு சமூக அறிவியல்

### மூலவரிகள்

**After defeating the French and their Indian allies in the three Carnatic Wars, the East India Company began to consolidate and extend its power and influence. However, local kings and feudal chieftains resisted this. The first resistance to East India Company's territorial aggrandisement was from Puli Thevar of Nerkattumseval in the Tirunelveli region. This was followed by other chieftains in**

**the Tamil country such as Velunachiyar, Veerapandiya Kattabomman, the Marudhu brothers, and Dheeran Chinnamalai. Known as the Palayakkarars Wars, the culmination of which was Vellore Revolt of 1806, this early resistance to British rule in Tamilnadu is dealt with in this lesson.**

**வரிவரியான மொழிபெயர்ப்பு**

மூன்று கர்நாடகப் போர்களில் பிரெஞ்சு மற்றும் அவர்களது இந்திய நட்பு நாடுகளைத் தோற்கடித்த பிறகு, கிழக்கிந்திய கம்பெனி அதன் சக்தியையும் செல்வாக்கையும் பலப்படுத்தவும் விரிவுபடுத்தவும் தொடங்கியது. இருப்பினும், உள்ளூர் மன்னர்களும் நிலப்பிரபுத்துவ தலைவர்களும் இதை எதிர்த்தனர். கிழக்கிந்திய கம்பெனியின் பிராந்திய விரிவாக்கத்திற்கு முதல் எதிர்ப்பு திருநெல்வேலி பிராந்தியத்தில் உள்ள நெர்கட்டும்செவலின் புலி தேவரிடமிருந்து வந்தது. இதைத் தொடர்ந்து தமிழ் நாட்டில் வேலுனாச்சியார், வீரபாண்டியா கட்டபொம்மன், மருது சகோதரர்கள், மற்றும் தீரன் சின்னமலை போன்ற பிற தலைவர்கள் இருந்தனர். 1806 ஆம் ஆண்டின் வேலூர் கிளர்ச்சியின் உச்சம் பாலயக்காரர்கள் போர்கள் என்று அழைக்கப்பட்டது, தமிழ்நாட்டில் பிரிட்டிஷ் ஆட்சிக்கு இந்த ஆரம்பகால எதிர்ப்பு இந்த பாடத்தில் கையாளப்படுகிறது.

**தழுவல் மொழிபெயர்ப்பு**

பிரெஞ்சுப் படைகளையும், அதோடு தோழமை கொண்டிருந்த இந்திய ஆட்சியாளர்களையும் மூன்று கர்நாடகப் போர்களில் தோற்கடித்திருந்த கிழக்கிந்திய கம்பெனி தனது அதிகாரத்தையும், செல்வாக்கையும் விரிவாக்கி ஒருங்கிணைக்கத் தொடங்கியது. எனினும் உள்ளூர் ஆட்சியாளர்களும் நிலக்கிழார்களும் இதனை எதிர்த்தனர். நாடுபிடிக்கும் அவர்களின் நோக்கத்திற்கு முதல் எதிர்வினை திருநெல்வேலிப் பகுதியின் நெற்கட்டும்செவலில் ஆட்சிபுரிந்து வந்த பூலித்தேவரிடமிருந்து வெளிப்பட்டது. இதைத்தொடர்ந்து வேலுநாச்சியார், வீரபாண்டிய கட்டபொம்மன், மருது சகோதரர்கள், தீரன் சின்னமலை போன்ற தமிழகத்தின் பிற பகுதிகளை ஆட்சிபுரிந்து வந்தோரும் எதிர்த்தனர். பாளையக்காரர் போர் என அறியப்படும் இது 1806இல் நிகழ்ந்த வேலூர் புரட்சிக்கு இட்டுச் சென்றது. தமிழ்நாட்டில் பிரிட்டிஷாருக்கு எதிராகத் தோன்றிய இத்தொடக்ககால எதிர்ப்புப் பற்றி இப்பாடத்தில் காணலாம்.

**மொழிபெயர்ப்பு பயிற்சியில் கலந்து கொள்ள 044-48601550 என்ற எண்ணிற்கு வாட்சப் உங்கள் பெயர் மற்றும் ஊருடன் பதிவு செய்யவும்.**

குருப் 2 ஆன்லைன் வகுப்புகள்
மே 6 முதல் துவங்குகிறது
தொடர்புக்கு , 9952521550